இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

சமூகவிஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறி - மட்டம் II,
இறுதிப் பரீட்சை -2006

முகாமைத்துவத்திற்கான அறிமுகம் – **SSF 2302**

காலம் : மூன்று (3) மணித்தியாலங்கள்

---

திகதி : **25.11.2006** நேரம் : பி.ப. **1.00 – 4.00** வரை

---

ஐந்து (5) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு (1) வினாவையேனும் தெரிவு செய்க.
விடைகள் தெளிவாகவும் நேர்த்தியாகவும் சுருக்கமாகவும் அமைதல் வேண்டும்.

## பகுதி – 1

1. (அ) ஒழுங்கமைப்பினை வரைவிலக்கணப்படுத்துக. (4புள்ளிகள்)
   (ஆ) ஒழுங்கமைப்பின் நோக்கங்களை அடைவதில் இது எவ்வாறு துணை செய்கின்றது. (8புள்ளிகள்)
   (இ) எவ்வாறு முகாமைத்துவத் தொழிற்பாடுகள் ஒழுங்கமைப்புக்கு முக்கியமானது என விளக்குக. (8புள்ளிகள்)

2. (அ) அதிகாரம் என்றால் என்ன? (4புள்ளிகள்)
   (ஆ) நேர்கோட்டு அதிகாரம் பணியாள் அதிகாரத்தில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது.? (8புள்ளிகள்)
   (இ) அதிகாரத்தைப் பகிர்வதன் அநுகூலங்கள் எவை? (8புள்ளிகள்)

3. (அ) முகாமைத்துவத் தொழிற்பாடுகளை சுருக்கமாக விளக்குக. (4புள்ளிகள்)
   (ஆ) ஒழுங்கமைப்பு அட்டவணையினை வரைந்து அதன் பகுதிகளை விளக்குக. (8புள்ளிகள்)
   (இ) கட்டுப்பாட்டு செயன்முறையின் அடிப்படைகளை விளக்குக. (8புள்ளிகள்)

## பகுதி 2

4. (அ) முகாமைத்துவ சிந்தனைக் கோட்பாடுகள் நான்கின் பெயினைத் எழுதுக.. (4புள்ளிகள்)
   (ஆ) முகாமையாளர் எவ்வாறு ஒரு தலைவராகின்றார். (8புள்ளிகள்)
   (இ) முகாமைத்துவத்தில் பணியாட்களை சேர்த்தல் ஏன் முக்கியமானது. (8புள்ளிகள்)

5. (அ) திட்டமிடல் என்றால் என்ன? (4புள்ளிகள்)

(ஆ) முகாமையாளரின் தலைமைத்துவ பாங்கினை விளக்குக. (8புள்ளிகள்)

(இ) பங்கேற்கும் முகாமைத்துவப் பாணியினை விளக்குக. (8புள்ளிகள்)

6. பின்வரும் எண்ணக்கருக்களுள் நான்கினை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் விளக்குக.

(அ) எதேச்சாதிகாரப் பாணியும் தலையிடாப் பாணியும்

(ஆ) வினைதிறனும் பயனுறுதியும்

(இ) பௌதீகச் சூழலும் மானிடச் சூழலும்

(ஈ) உடலியல் தேவையும் காப்புத் தேவையும்

(உ) இணைப்பாக்கமும் முகாமைத்துவமும் (4x5=20 புள்ளிகள்)

## பகுதி 3

7. (அ) உடன்பாடான வேலைச்சூழல் என்ற பதத்தின் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது? (4புள்ளிகள்)

(ஆ) உங்களது நேரத்தை முகாமை செய்யக்கூடிய இரண்டு எளிய நுட்பத்தினை விளக்குக. (8புள்ளிகள்)

(இ) நேர முகாமைத்துவத்தில் பரட்டோவின் 80/20 கோட்பாடு என்றால் என்ன? (8புள்ளிகள்)

8. (அ) ஊக்கலை வரைவிலக்கணப்படுத்துக. (4புள்ளிகள்)

(ஆ) மாஸ்லோவின் தேவைகளின் படிமுறையில் தேவைகள் அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் முறையினை விளக்குக. (8புள்ளிகள்)

(இ) தொடர்பாடல் செயல்முறை என்பதிலிருந்து விளங்கிக்கொள்வது யாது? (8புள்ளிகள்)

9. பின்வரும் எண்ணக்கருக்களில் நான்கினை விளக்குக.

(அ) "X" கோட்பாடு

(ஆ) பொறுப்புக் கூறல்

(இ) கட்டுப்பாட்டு வீச்சு

(ஈ) நேர்கோட்டு முகாமைத்துவம்

(உ) நேரக் கணக்காய்வு (4x5=20 புள்ளிகள்)

*** பதிப்புரிமையுடையது ***